கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

பொதுக்கலைமாணித் தேர்வு பகுதி – 1 2012/2013 (வெளிவாரி)

(ஏப்ரல்/மே 2015)

TL 202 குறிப்பிட்ட பாடநூல்கள்

**Prescribed Texts**

நேரம்: 03 மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

---

01. பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

பெருங்களிற்று அடியின் தோன்றும் ஒருகண்
இரும்பறை இரவல! சேறி ஆயின்
தொழாதனை கழிதல் ஓம்புமதி வழாது
வண்டுமேம் படூஉம் இவ்வறநிலை ஆறே
<u>பல்லாத் திரள்நிரை பெயர்தரப் பெயர்தந்து</u>
<u>கல்லா இளையர் நீங்க நீங்கான்</u>
<u>வில்லுமிழ் கடுங்கணை மூழ்கக்</u>
<u>கொல்புனல் சிறையின் விளங்கியோன் கல்லே</u>

அ) இப்பாடலின் பொருளைத் தெளிவுற எழுதுக. (10 புள்ளிகள்)

ஆ) அடிக்கோடிட்ட பகுதியின் சிறப்பினை விளக்குக. (10 புள்ளிகள்)

02. புறநானூற்றுப் பாடல்கள் வீரர்களின் புகழைப் பாடும் முறையை உமக்குத் தரப்பட்ட பகுதியை ஆதாரமாகக் கொண்டு விளக்குக. (20 புள்ளிகள்)

03. திருவாசகத்தில் சிவனின் தோற்றப்பொலிவும் கருணையும் வெளிப்படுத்தப்படுமாற்றை ஆராய்க. (20 புள்ளிகள்)

04. கண்ணகி வழக்குரையில் உமக்குத் தரப்பட்ட பகுதியை ஆதாரமாகக் கொண்டு 'கண்ணகி பாத்திரத்தின்' குணவியல்புகளை ஆராய்க. (20 புள்ளிகள்)

2-2

05. காளமேகப் புலவரின் தனிப்பாடல்களிலே காணப்படும் வித்துவ, அங்கதப் பண்புகளை அப்பாடல்களின் துணையுடன் விளக்குக. (20 புள்ளிகள்)

06. தேம்பாவணி பிரிந்த மகவைக்காண் படலத்திலே யேசுவைப் பிரிந்த பெற்றோரின் வேதனைகள் உருக்கமாகச் சித்திரிக்கப்படுமாற்றையும், அதனூடாக யேசுவின் புகழ் பேசப்படுமாற்றையும் எடுத்துக் காட்டுக. (20 புள்ளிகள்)

07. ந.பிச்சமூர்த்தியின் புதுக்கவிதைகளில் தனிமனித உணர்வுகளும், அன்றாட அனுபவங்களும் வெளிப்படுத்தப்படும் முறை பற்றி விளக்குக. (20 புள்ளிகள்)

08. 'ஒரு சாதாரண மனிதன் சரித்திரம்' **அல்லது** 'செய்நம்பு நாச்சியார் மான்மியத்தில்' காணப்படும் சமூக விமர்சனப் பண்புகளை எடுத்துக் காட்டுக. (20 புள்ளிகள்)

*******************************************************************